DMA/P/2015/8-3 2016.06.10

முகாமைத்துவக் கணக்காய்வுச் சுற்றறிக்கை 02/2016

அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்.
திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டமுறைச் சபைகள்
மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் யாவருக்கும்,

**<u>வெளிநாட்டுதவி அடிப்படையிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக உள்ளகக் கணக்காய்வாளர்களை நியமித்தல்</u>**

வெளிநாட்டுதவி அடிப்படையிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான கருத்திட்டப் பதவியணிக்கு உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவர் உள்ளடங்காததின் காரணமாக இலங்கையின் பிரதான அபிவிருத்தி ஆக்கக்கூறாகிய வெளிநாட்டுதவிக் கருத்திட்டங்களுகளை உரிய உள்ளகக் கட்டுப்பாட்டுக்கு உட்படுத்திக் கொள்வது பிரச்சினையாகவுள்ளது. இதன் காரணமாக அரசிறை முகாமைத்துவத்தில் அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நன்மைகள் உரிய அளவிலிருந்து தாமதமின்றி பொது மக்களுக்குக் கிடைப்பதை சான்றுப்படுத்துவதற்கும் வெளிப்படைத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் தடைகளாகக் காணப்படுகின்றது.

அதனால் முகாமைத்துவச் சேவைச் சுற்றறிக்கை 1/2016 இல் 1.1,1.2, மற்றும் 1.3 ஆகிய உப பிரிவுகளின் மூலம் விபரிக்கப்படுகின்ற மற்றும் கருத்திட்டத்தின் மொத்தச் செலவு ஐ.அ.டொலர் 10 மில்லியன் அல்லது அதற்குக் கூடுதலான கருத்திட்டங்களுக்காக உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கின்றது. அதன் பிரகாரம்,

1. புதிய கருத்திட்டங்களுக்காக மேற்சொன்ன சுற்றறிக்கையின் பிரகாரம் கருத்திட்ட முன் மதிப்பீட்டுக் கட்டத்தில் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை கருத்திட்டப் பதவியணிக்கு உள்ளடக்குதல் வேண்டும்.

2. தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற கருத்திட்டங்களின் முன்னுள்ள கருத்திட்டக் கால எல்லை குறைந்தபட்சம் ஒரு வருடம் அல்லது அதற்குக் கூடுதலாகவுள்ள சந்தர்ப்பங்களில் அந்தக் கருத்திட்டங்களுக்காக முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் முறையான அனுமதியுடன் உள்ளகக் கணக்காய்வாளர் ஒருவரை இணைத்துக் கொள்வதற்கு தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

கருத்திட்டப் பதவியணியை இணைத்துக் கொள்வது சம்பந்தமாக செலவு எல்லையைக் காட்டுகின்ற முகாமைத்துவச் சேவைச் சுற்றறிக்கை 1/2016 இல் 1.4 ஆம் பிரிவு தவிர்ந்த ஏனைய சகல

பிரிவுகளையும் உள்ளகக் கணக்காய்வாளர் தொடர்பிலும் தேவையான விதத்தில் ஏற்புடையாதல் வேண்டும்.

இந்தச் சுற்றறிக்கை 2016 ஜூன் மாதம் 15 ஆம் திகதி முதல் செயல்வலுப்பெறும்.

ஆர்.எச.எஸ். சமரதுங்க
செயலாளர்,
நிதி அமைச்சு

பிரதிகள் : சனாதிபதி செயலாளர்
பிரதமரின் செயலாளர்
அமைச்சரவையின் செயலாளர்
கணக்காய்வாளர் அதிபதி
பணிப்பாளர் நாயகம்- முகாமைத்துவச் சேவைத் திணைக்களம்
அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர்
தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் செயலாளர்